ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2323/39 - 2023 මාර්තු මස 17 වැනි සිකුරාදා - 2023.03.17

*2323/39 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்)**

3 அ(1) ஆம் உப பிரிவின் கீழான பிரகடனம்

இலங்கை சட்ட ஒழுங்குவிதிகள் கோவையின் 12 ஆம் அத்தியாயமான பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய அந்தக் கோவையின் 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 3அ(1) ஆம் உப பிரிவினூடாக எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகிய என்னால், 2022, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்படும் பிரகாரம் நியமிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படுபவர்களைக் கொண்ட உள்ளூர் அதிகார சபைகளின் வட்டாரங்களுக்கான தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் பதவிக் காலத்தை 2023, மாச்சு மாதம் 31 ஆந் திகதி வரை நீடிப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

திரு. மஹிந்த தேஷப்பிரிய (தவிசாளர்)
திரு. ஜயலத் ர. வி. திசாநாயக்க (அங்கத்தவர்)
திருமதி டபிள்யு. எம். எம். ஆர். அதிகாரி (அங்கத்தவர்)
திரு. கே. தவலிங்கம் (அங்கத்தவர்)
திரு. ஐ. ஏ. ஹமீட் (அங்கத்தவர்)

**தினேஷ் குணவர்தன** (பா.உ),
பிரதம அமைச்சர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு 05,
2023, மாச்சு 15.

EOG 03 - 0320

1A - G 39182 — 07 (2023/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*